உ

அபிராமி அந்தாதி

49

வது

செய்யுள் ஆய்வுரை

தெய்வம் நமக்குத் துணை
ஓர் தீங்கும் வராமாட்டாது

இப்பாடலின் பலன்
நாத யோகம் கிட்டுதல்

வெளியீடு:
பழனைச் சபை
வழக்கம்பரை
சுழிபுரம்
1994

சிவத்திரு சு. சுந்தரராசக் குருக்களும்
அபிராமியந்தாதி 49 வது பாடலும்

அபிராமியந்தாதி 49வது பாடல் ஆய்வுரையை வெளியிடுங்கள் இதோ எம்மிடம் உள்ள சக்தி கவச நூல் இதை விற்பனை செய்யுங்கள் இதன் மூலம் வரும் பணத்தையும் மேலும் வேண்டிய பணத்தையும் நான் தருகின்றேன் என்று எம்மை வேண்டிக்கொண்டார் சிவத்திரு. சு. சுந்தரராசக்குருக்கள் அவர்கள்

சிலஆண்டுகளுக்கு முன்னர் வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில் ''சக்திகவச'' நூல் வெளியிடப்பட்டது. விற்பனை செய்யப்பட்டு எஞ்சி இருந்த பிரதிகளை சென்ற ஆடிச்செவ்வாய் அன்று எம்மிடம் தரப்பட்டது அன்று அம்பாள் வழிபாட்டிக்க வந்த பக்தர்களிடம் நாம் நூல்களை விநியோகித்து அச்சிட எமக்கு வேண்டிய பணத்தின் கால் பகுதியை சேர்த்துக் கொண்டோம்

சிவத்திரு சு.சுந்தரராசக்குருக்கள் வழக்கம்பரை அம்பாளின் அர்ச்சகரில் ஒருவர் அம்பாளை அழகு படுத்துவதிலும் குறித்தநேரத்தில் கோவில் கருமங்களை நிறைவு செய்வதிலும் வல்லவர். இன்று எமது பகுதிகளிலுள்ள ஆலயங்கள் பலவற்றில் சுவாமிக்கு அலங்காரம் (சாத்துப்படி) செய்து அழகிய பூமாலை சூட்டி எம்மை எல்லாம் மனம் கசிந்து வழிபாடு செய்வதற்கு வழிகாட்டியாக வாழ்ந்து வருகின்றார்.

இவர் தினமும் கோவில் கருமங்கள், பூசைகள், பூமாலை புனைதல், சுவாமியை அலங்கரித்தல் ஆகிய கருமங்களுடன் மக்கள் பணிகள் பலவற்றையும் நிறைவு செய்து வருவதை நாம் நன்கு அறிவோம் இவருக்கு ஓய்வு இல்லை என்றே கூறலாம் இவரிடம் எல்லாவற்றிக்கும் மேலாகக்காணப்படும் சிறப்பு யாவரையும் அணைத்து கருமங்கள் செய்யும் திறமை நிறைந்துள்ளது என்பதை தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அபிராமியந்தாதி 49வது பாடல் இசையின் தன்மைகளை நன்கு வெளிப்படுவதாக ஆய்வாளர் புலவர் கே. சந்தானராமன் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது சிவத்திரு. சு. சுந்தரராசக்குருக்கள் ஓர் இசைப்பிரியர் இவர் சில விழாக்களில் கடம் வாசித்து தமது திறமையைக் காட்டியுள்ளார் இசைவிழாக்களில் கலந்தும் இன்புற்று வருகின்றார் யாவருடனும் அன்பாக வாழ்வதில் இவரும் இவரது மனைவி மகன் விளங்கிவருகின்றனர் இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு இவர் நல்ல திறமைகளைப்பெற்று வாழ அம்பாள் அருள் பாலிக்க நாமும் அம்பாளை வணங்குவோம் பாடலின் பயன் திறமையில் மேலோங்கல் என்று கூறப்பட்டுள்ளது பாடலைப்படித்து யாவரும் மேலோங்கி வாழ்வோம்.

'' ஜனைச்சபையார் ''

சிவமயம்

அபிராமி அந்தாதி

புலவர். திரு க. சந்தானராமன் M. A. B. Lit

ஆய்வுரை 49 வது செய்யுள்

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது உளைக்கையமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சலென்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே!

அ. நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே!

1. நரம்பையொட்டி இயங்கும் இசையின் வடிவாகத் திகழும் தலைவி என்பது பொதுவான பொருள்.

2. யாழ், வீணை, பிடில் முதலான நரம்புக் கருவிகளின் சுருதியோடு இணைந்து இசை எழும்புவதால் 'நரம்பை அடுத்த இசை' என்றார்.

3. இசைக்கும் நமது நரம்புமண்டலத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தாலாட்டுப்பாடல் குழந்தையின் நரம்பு மண்டலத்தில் விளைவினை ஏற்படுத்தித் தூங்கச்செய்கின்றது. 'நீலாம்பரி' பெரியவர்களையும் உறங்கச் செய்கிறது. 'பூபாளம்' விழித்தெழச் செய்கிறது 'புன்னாகவராளி' பாம்பின் நரம்பு மண்டலத்தில் செயல்பட்டு அதனை ஆடச்செய்கிறது. இவ்வாறு நரம்புமண்டலத்தில் விளைவு ஏற்படுத்துவதால் நரம்பை அடுத்த இசையாயிற்று.

4. அங்ஙனமே இசைபாடுவோரின் நரம்பு மண்டலமும் இசைக்கும் பொழுது செயல்படுகின்றது. ஒலி எழுப்பிவரும் வழியில் எங்கேனும் சிறுநரம்பொன்று பாதிக்கப்படின் இசையில் 'அபஸ்வரம்' தட்டுகிறது.

5. இசையின் விளைவாக ஏற்படும் மாறுதல்களை நவீன ஆராய்ச்சியாளர்கள் விரிவாக எடுத்துரைக்கின்றனர். பயிர் அதிகப்பயன் தரும் என்றும், பசு அதிகப்பால் தரும் என்றும் இசையின் விளைவுகள் குறித்து அவர்கள் நிறுவியுள்ளனர். அதேகருத்தினை நம் முன்னோர் அனுபவத்தால் கண்டு நரம்பை அடுத்த இசையென்று போற்றினர்.

6. இங்கு அம்பிகையினை இசையின் வடிவானவள் என்கிறார். சான்றோர் இறைவனை 'நாதப்ரம்மம்' என்பர். நாதப்பிரம்மத்தை— இசைவடிவான கடவுளை இசையின் மூலம் வழிபடும் வழிபாட்டை 'நாத உபாஸனை' என்று போற்றுகின்றனர். சிறந்த இசைவாணர்களை 'நாதயோகிகள்' என்கின்றனர். திருநீலகண்ட யாழ்ப்பாணர், ஆனாயர் ஆகிய இரு சைவநாயன்மார்களும் நாதோபாஸகர்களே. சங்கீத மும்மூர்த்திகளில் முத்துச்சுவாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய இருவரும் தீவிரமான தேவி உபாஸகர்கள். 'நாதாதிகுருகுஹ' என்று தீட்சிதரின் முதல் கிருதியே துவங்குகிறது.

7. 'ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன் இறைவன்' என்று தேவாரமும் ''இன்னிசை வீணையின் இசைந்தோன் காண்க அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன் காண்க'' எனத் திருவாசகமும் இறைவன் இசைவடிவாய் இருப்பதைக் குறிப்பிடுகிறது.

8. 'நாதரூபா' என்றும் 'நாதரூபிணி' என்றும் இரண்டு இடங்களில் சகஸ்ரநாமம் அம்பிகையினைக் குறிப்பிடுகின்றது. 'பரா' முதலிய ஒலியின் இயல்புகளைக் குறிப்பது முன்னால் வரும் நாமா பின்னால் வருவது 'நாதப்ரமம்' என்னும் இசைவடிவாய் நிற்கும் நிலையினைக் குறிக்கிறது.

9. தீவிர இராமபக்தரான தியாகராஜ சுவாமிகளும் தனது இசைப் பாடல்களில் சிவபெருமானது 'நாதப்ரம்ம' நிலையினைப் போற்றிப் புகழ்கிறார். ''நாததநுமனிசம் சங்கரம் நமாமிமே மநஸா சிரஸா — நாதத்தையே சரீரமாகவுடைய சங்கரனை மனதாலும் சிரத்தாலும் வணங்குகிறேன்'' என்கிறார்.

'சங்கீத ஞானமு பக்திவிநா' என்ற பாட்டில் ''இசை ஞானமும் பக்தியும் அன்றி உலகில் வேறு நல்வழி உண்டா?'' என வினவுகிறார். 'விதுலகு' என்ற பாடலில் இசைவடிவில் இறைவனை உபாஸிக்கும் பெரியோர்களுக்கு வணக்கம் தெரிவிக்கிறார்.

'மோட்சமு கலாத, என்ற பாட்டில் ''பிரணவநாதம் ஸப்தஸ்வரங்களாகப் பெருக வீணை ரசிப்பதன் மூலம் இசை வடிவ உபாஸனை புரியும் சிவபெருமானின் மனப்போக்கை அறியாதவர்

களுக்கு மோட்சமும் உண்டா எனக்கேட்கிறார். இதிலிருந்து, இசைவடிவான வழிபாடு சிவபெருமான் வழங்கியது எனத்தெரி கிறது.

''சோபில்லு ஸப்தஸ்வர'' என்ற பாடலில் நாபி, கழுத்து, இதயம், நாசி ஆகியவற்றில் பிரகாசிக்கும் ஏழு ஸ்வரங்களென்னும் அழகிய மூர்த்தங்களைத் துதிசெய் மனமே! என அறிவுறுத்து கிறார். இங்கு நாபியிலிருந்து எழும் இசையும் ஒருவித குண்டலினி யோகமே என்பது புலனாகிறது.

10. திருமுறைகளும், நாயன்மார்களும், சங்கீத மூர்த்திகளும் போற் றியபடி அதே 'நாதப்ரம்மமாய்' இருக்கும் அம்பிகையினை அபிராமிப்பட்டரும் இசைவடிவாய் நின்ற நாயகி என்கிறார். சிவத்தினின்று சக்தியின் தோற்றம் ஏற்படும் பொழுது உண்டா கும் ஸ்பந்தம் அல்லது அசைவே நாதம். அதுவே இசை, அதுவே சக்தியம்சம். இவ்வாறு உரையாசிரியர் திரு சண்முகநாதன் விளக்குகிறார்.

ஆ. சுரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி

1. இவ்வுடலாகிய குடிலைச் சார்ந்து குடிபுகுந்து இருக்கும் உயிர் என்கிறார்.

2. முன் பாடலின் விளக்கத்தில் இவ்வுடம்பு எவ்வனம் 'சுரம்பை' ஆகிறது என்பதனை விரிவாகக் கண்டோம். அச்சுரம்பையும் இவ் வுயிருக்கு உரியது அன்று. சொந்தமான குடில் என்று கூறமுடி யாது. வாடகை வீட்டில் குடியிருப்பது போல் உரிமையின்றி எப்போது காலிசெய்ய வேண்டிவரும் என்ற நிலையிலேயே இருக் கிறது. எனவே 'குடிபுக்க' ஆவி என்றார்.

இ. வெங்கூற்றுக் கிட்ட வரம்பை அடுத்து மறுகும் அப்போது

1. உயிர்களுக்கிட்ட கால எல்லை முடியும் பொழுது, கொடிய கூற் றுவன் வந்து உயிரினைக் கவருகிறான்; அப்பொழுது இன்னலு றும் பொழுதாகும்.

2. 'மறுகுதல்' என்ற சொல்லுக்குச் சுழலுதல், வருந்துதல், அரைய துதல், கொண்டுபோதல் ஆகிய பொருள்கள் உண்டு. எனவே, கூற்றுவன் கால எல்லையினை அடுத்து உயிரினைக் கொண்டு செல்லும் பொழுது எனவும், ஆவி வருந்தி, அல்லற்பட்டு, அரை பட்டுச் சுழலும் பொழுது எனவும் விரியும்.

8. நீதியின் எல்லைக்குக் கட்டுப்பட்டும், உயிர்களின் கால எல்லைக் குக்கட்டுப்பட்டுமே அவன் கவருகிறான். ஆகவே 'வரம்பை அடுத்து' வருபவன் என்றார்.

4) இப்போது நீ இங்கு இவ்வுயிர்பால் வரலாம் என [வரம்பு ஒன்று உண்டு. அது கூற்றுவனுக்கு இறைவன் இட்ட வரம்பு அல்லது எல்லை. ''உன் வாழ்வு முடிந்துவிட்டது இனி உன் உயிர் கூற்று வன் உடையது'' என்று அவனிடம் உயிர்களை விட்டநிலை கூற்றுக்கிட்ட வரம்பாகும். அதாவது கூற்றுவன் முன்னே உயிர் களை இட்டுவிட்ட நிலை.

FF. அப்போது அரம்பை அடுத்த அரிவையர்
சூழவந்து, வளைக்கையமைத்து அஞ்சலென்பாய்

1. அக்காலன் வரும் சமயத்தில் நீ அரம்பை முதலான பெண்கள் புடைசூழ எழுந்தருளி உனது வளையணிந்த திருக்கரத்தால் 'அபயம்' காட்டி என்னை 'அஞ்சற்க' எனக்கூறுதல் வேண்டும்.

2. நான் உன்னைக் காப்பாற்றுவேன் என உணர்த்த அபயக்கரம் காட்டுதலை வளைக்கை அமைத்தல் என்றார். 'திரி அமைப்பில்' என்ற உண்மை விளக்கம் இங்கு ஒப்புமை.

3. அப்போது உற்றார், உறவினர்கள் மரணத்தை எண்ணி அழுதும் அவலக்குரல் எழுப்பியும் அவ்விடத்தில் ஒரு துன்பச்சூழலை ஏற் படுத்திவிடுவர். அதனை மாற்ற அரம்பை முதலான பெண்களு டன் வரவேண்டும். ஏனெனில் அவர்களது ஆடை அணிகலன் களின் இனிய ஒலி எங்கும் நிறைந்திருப்பது எனது காதில் விழும். அத்துடன் அன்னையாகிய நினது கைவளையலின் நாதமும் எழும்பி அங்குள்ள துன்பசூழ்நிலையினை மாற்றிவிடும். எனவே அரம்பை அடுத்த அரிவையருடன் வந்து வளைக்கையும் அமைக்க வேண்டும் என்கிறார்.

4. 'ரம்பாதி வந்திதா' என்பது சகஸ்ரநாமம். அதாவது அரம்பை முதலியவர்களால் வணங்கப்படுபவள் என்பது பொருள். சாக்த நூல்களில் குறிப்பிடப்படும் அரம்பை, அலம்புசை, மனோகரை, சந்த்ரகலை முதலான அறுபதாயிரம் தெய்வீகப் பெண்களையே இங்கு குறிப்பிடுகிறார் அவர்கள் அன்னையின் 'பரிவாரங்கள்' ஆவார்கள். நடனமிடும் அரம்பை, ஊர்வசி போன்ற பெண்களை இங்கு குறிப்பிடவில்லை.

5. அன்னையின் பரிவாரங்களாகிய அவர்கள் என்றும் மூதாமை எய்துவதில்லை. இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட 'யௌவன' நிலையிலேயே ஏப்போதும் இருப்பவர்கள். ஆகவே அப்பருவப் பெண்களைக் குறிக்கும் 'அரிவையர்' என்ற சொல்லினையே எடுத்தாள்கிறார்.

6. இறுதிக் காலத்தில் எதனைக் கண்டும் கருதியும் உயிர் விடுகிறார்களோ அதாகவே ஆகிவிடுவர் என எண்ணுவது மரபு. அதன்படி இறுதிக் காலத்தில் உனது பரிவாரங்களையும் பிறவற்றையுமே எண்ணினால் அவைகளாக ஆகி உன்னுடனேயே இருக்கலாமல்லவா?

7. குரம்பையினை விடுத்து உயிர் ஏகும் பொழுது காக்கும்படிவேண்டும் மதுராபுரி அம்பிகை மாலையிலுள்ள பாடல் வருமாறு:

நெளிக்கும் புழுவுக்கிடமாம் குரம்பையின் நின்றுமுயிர்
ஒளிக்கும் பொழுது வெளிப்படுவாய்! ஒழியாப் பிறவிச்
சுளிக்கும் கடலில் சுழலாமல் வாழ்வைத் துறந்து படைத்து
அளிக்கும் பராசக்தியே! மதுராபுரி அம்பிகையே!

இசையில் தேர்ச்சி பெறுதலும், 'நாத யோகம்' கிட்டுதலும் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

ஓ

சிவமயம்

சற்குருவின் செய்தி ஒன்று

அன்பும் ஆசீர்வாதமும்!

தேவாரம் படியுங்கள்
இம்மாபெரும் போதனைகளைப் பாடுங்கள்
அவற்றுள் அடங்கியுள்ள ஞானத்தை
உங்கள் வாழ்வின் அனுட்டானத்துக்கும்
ஆத்மீக வழிக்கும் உதவும் முறையில்
பயன் படுத்துங்கள்.
சிவனை வழிபடுங்கள்
சிவனை நேசியுங்கள்
சிவனைப் பற்றிப் பேசுங்கள்
சிவப் பணி செய்யுங்கள்

சிவாய சுப்பிரமுனிய சுவாமி

ஜபம் செய்ய

மான் தோல் விரித்து அதன் மீதுட்கார்ந்து ஜபம் செய்வ தற்குக் காரணம் யாதெனில் பூமிக்கு இழுக்கும் தன்மையுண்டு. துணியை பூமியின் மீது விரித்து அதன்மேல் உட்கார்ந்து ஜபம் செய் தாலும் சரி அல்லது மனையின் மீதுட்கார்ந்து ஜபம் செய்து வந் தாலும் சரி ஜபத்தின் பலன் புருஷனை அடைய விடாமல் காந்தம் ஊசியை இழுப்பது போல் பூமி புருஷன் செய்யும் ஜபத்தை அகரி வித்து இழுத்துக் கொள்ளும்.

இதனால் தான் எந்தத் தோல் மீதாகிலும் உட்கார்ந்து ஜபம் செய்து வந்தால் பூமிக்கு இழுக்க சக்தி இராது ஆதலால் எந்தத் தோலின் மீதாகிலும் இருந்து ஜபம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லியிருக்கிறார்.

மனையின் மீது உட்காராமல் பூமியில் தோல் விரித்து உட் கார்ந்து ஜபம் செய்து வந்தால், நல்ல சமயத்தில் சிற்றெறும்புகள் உடம்பினிடம் சென்று சுருக்கென்று கடிக்கும் அச்சமயம் புருஷனது ஜபத்திற்கு மீன்ன முண்டாகும். அதனால் மனைமேல் மான்தோல் போட்டு அதன்மேல் வெள்ளை வஸ்திரம் மடித்துப் போட்டு உட் கார்ந்து ஜபம் செய்து வரவேண்டும். பூமியின் ஈர்ப்புச் சக்தியில் இருந்து காக்கவும் எறும்புகளின் தொல்லையில் இருந்து காக்கவுமே மான்தோல் ஜபத்துக்கு உதவியாகவுள்ளது என்பதை நாம் அறிவோம் ஜபம் நல்வாழ்வு தரும். அமைதி தரும்.

தொகுப்பு: க. வா.

எமது அபிராமியந்தாதி ஆய்வுரை வெளியீடுகளை கீழ்க் காணும் முகவரியாளரிடமும் பெற்றுக்கொள்ளலாம்

திரு சி. மருதபிள்ளை ஆசிரியர் "ஆனந்தவாசம்" வட்டுக்கோட்டை
திரு க. சி. நமசிவாயம் நிலஅளவையாளர், 125 மூயனார் வீதி
வண்ணார்பண்ணை
திரு சி. கிருஷ்ணானந்தன் மத்திய மருந்தகம் நேரியகுளம் வவுனியா
திரு எஸ். கோவிந்தர் சிரணி நாகம்மாள் தேவஸ்தானம் கட்டுடை
திரு க. சுந்தரம்பிள்ளை B. O. L. விரிவுரையாளர் தொழில்
நுட்பக் கல்லூரி கொக்குவில்
திரு சி. மகேந்திரன் பிள்ளையார் கோவிலடி அராலி தெற்கு
திரு கே. சிவசங்கரநாதன் சிவம் மெடிக்கல் புத்தகசாலை சாவகச்சேரி
திரு எஸ். சிவகுப்பிரமணியம் ஓய்வுநியர் சித்தன்கேணி
டாக்டர் சி. சண்முகநாதன் ஒட்டுசுட்டான்
திரு ச. சிறிதரன் வேல் வாசம், சுழிபுரம் இழக்கு, சுழிபுரம்
மிகுதி தொடரும்

ராஜா பதிப்பகம், பண்ணாகம்.